மல்லியகரை ஊராட்சி ஆத்தூர் (TK) சேலம் (Dt) 636107

மல்லியகரை கிராம ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்.

முன்னிலை- கனிமொழி ஜோதி.

ந.க.எண். 2 ./2024-25 நாள். 28.06.2024.

பொருள்- மனைப்பிரிவு - ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் மல்லியகரை ஊராட்சி கிராம சர்வே எண். 2/1ஏ2 , 3/1ஏ1ஏ, 3/2ஏ2 - 3.72 ஏக்கர் (அ) 15064.42 சதுர மீட்டர் பரப்பளவில் அமையும் மனைபிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டது - மனைப்பிரிவு களுக்கு இறுதி அளித்து வரைபடம் அங்கீகரித்தல்- சம்மந்தமாக.

பார்வை- 1) நகர் ஊரமைப்பு இயக்குனர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 19779/2020/போ.நாள். 24.12.2020.

2) அரசாணை எண். 138, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 04.06.2024.

3) அரசாணை எண். 79, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 04.05.2017.

4) அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வாங்கல்துறை நாள். நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை நாள். 31.01.2020.

5) அரசாணை எண். 141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 16.07.2020.

6) அரசாணை எண். 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள். 09.12.2020.

7) நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் இணைய தள விண்ணப்ப எண். NRD1W3PF ந.க.எண். SLM/NRD1W3PF/23272/2024 நாள். 25.05.2024.

8) அரசு கடிதம் எண். 19113/ந.வ.4(3) 2017-1 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 30.08.2017.

9) நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/LA1 நாள். 09.09.2021.

10) தானப் பத்திர எண். 2708/2024 நாள். 03.05.2024 மற்றும் தானப் பத்திர எண். 2709/2024 நாள். 03.05.2024.

11) ஊராட்சி தீர்மான எண். 60 /2024 நாள். 28.06.2024.

உத்திரவு.

பார்வை 1,2 மற்றும் 3ல் காணும் அரசாணையின்படியும் பார்வை 7ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு சேலம்

அவர்களின் உத்திரவின்படி சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம் மல்லியகரை கிராம சர்வே எண். சர்வே எண். 2/1ஏ2 , 3/1ஏ1ஏ, 3/2ஏ2 - 3.72 ஏக்கர் (அ) 15064.42 சதுர மீட்டர் புன்செய் பரப்பளவில் அமைந்துள்ள மனைபிரிவிற்கு தொழில் நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டது.

பார்வை 10ல் காணும் சார்பதிவாளர் ஆத்தூர் அவர்களின் தான பத்திரங்களின்படி பொது உபயோக இடம் மற்றும் சாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தையும், தலைவர் மல்லியகரைஊராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைபிரிவிற்கு இடத்தினை சந்தை மதிபபில் ஒ.எஸ்.ஆர். லேண்ட் கட்டணம் ரூ. 29,48,000/- அரசு தலைப்பில் செலுத்தியதில் 3% கணக்கிட்டு ஊராட்சி வளர்ச்சி கட்டணம் ரூ. 88440/- உரிய அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே வரைபடத்தின் ஒதுக்கியுள்ள அனைத்து மனைபிரிவுகளுக்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

| வ. எண். | சர்வே எண். | மனைபிரிவின் பரப்பளவு | ஒப்புதல் வழங்க கூடிய மனைகள் |
|---|---|---|---|
| 1 | 2/1ஏ2 , 3/1ஏ1ஏ, 3/2ஏ2 | 3.72 ஏக்கர் (அ) 15064.42 சதுர மீட்டர் | 80 |

<u>நிபந்தனைகள்.</u>

1) மனைபிரிவு சாலைகளுக்காக தானமாக உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிலத்தில் பிறகாலத்தில் எவ்வித மாற்றங்களும் செய்யக் கூடாது.
2) மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விவரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைக்கக் கூடாது.
3) அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள எந்த ஒரு மனையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு மற்றும் வீடு கட்டுவதற்கு

மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். இதில் கடைக்கும் பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்துதல் கூடாது.

4) மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்ட கடைக்கான அல்லது கடைகளுக்கான மனையை வரைபடத்தில் காட்டியுள்ளது போல் உட்பிரிவு செய்யப்பட வேண்டும். மனைகளை அதற்குரிய உபயோகத்திற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

5) மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதுமிருந்த கட்டணம் செலுத்த வேண்டியிருப்பது ஏதேனும் பின்னர் கண்டறியப்படின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.

6) விற்பனை செய்யப்படாத ஒவ்வொரு மனைபிரிவும் பத்திரப்பதிவு செய்யும் போது மனைபிரிவு அங்கீகாரம் வரைபட நகலினை இணைத்து பத்திரப்பதிவு செய்திட வேண்டும். மேலும் மனைகளை விற்பனை செய்யும் போது நகர்ஊரமைப்பு உதவி இயக்குனர் ஆணையின் நகலோடு ஒப்புதல் அளிக்கப்பட வரைபட நகல் மனைதாரர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

7) அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனம் செய்து உத்திரவுகள் பிறக்கப்பட்டால் அந்த உத்திரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.

8) பத்திர பதிவுகள் மற்றும் நில உடைமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழு பொறுப்பாவார்.

9) திறந்த வெளி இடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலத்தின் வாயிலாக மனை உரிமையாளரால்விற்பனை செய்யப்பட்ட உள்ள மனையின் ஊடே உயர் அழுத்த / சாதாரண மின் அழுத்த மின்சார லைன்கள் அமைத்து வசதிகள் செய்துக் கொள்ள அனுமதியில்லை.

10) வீட்டு மனைபிரிவுகளில் ஏற்படுத்தப்பட்ட சாலைகள் தற்போதைய நிலையிலேயே இருக்க வேண்டும். இதில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தக் கூடாது.

11) இம்மனைபிரிவில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து அனுமதி பெற வேண்டும்.

12) வீட்டு மனைகளில் இருந்து கழிவு நீர் செல்ல வெளியே சொந்த இடத்தில் உறிஞ்சு குழி அமைத்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

13) ஊராட்சியில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து 100 மீட்டர் இடைவெளியில்புதிய தனி நபர் ஆழ்துளை கிணறு அமைக்க தடை செய்யப்பட்டுள்ளது.

14)

J. Kanimozhi

தலைவர்
மல்லியகரை ஊராட்சி.

தலைவர்
மல்லியகரை ஊராட்சி
ஆத்தூர்.

<u>பெறுதல்</u>

திரு R.இரமேஷ் மற்றும் மூவர்.
த/பெ ராமசாமி,
61, ஜங்கமசமுத்திரம் அஞ்சல்,
கெங்கவல்லி வட்டம், சேலம் மாவட்டம்.

<u>நகல்.</u>

1) சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், ஆத்தூர்,
2) உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம்,
3) வட்டார வளர்ச்சி அலுவலர் ( கிராம ஊராட்சிகள்) ஊராட்சி ஒன்றியம், ஆத்தூர்.
4) கண்காணிப்பு பொறியாளர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சேலம்.